பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 05 திங்கட்கிழமை 18.04.2022 கதிர் 164

### இது ரகசியம் அல்ல!

கடந்த வாரம் வியாழ மாற்றம். பல பிரமுகர்களுக்கு இன்று அதன் விளைவு தெரியும் என்று தோன்றுகின்றது.

அமைச்சரவை மாற்றம் இன்று. பிரதமர் பதவியில் மஹிந்தர் நீடிப்பதா என்பது கூட நேற்றிரவு வரை ஊசலாடிக் ☞ 2

## காலிமுகத்திடலில் தமிழில் ஓங்கி ஒலித்தது தேசிய கீதம்



கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று மாலை தமிழ் மொழியில் மிகவும் உணர்வுபூர்வமாக தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலகவேண்டும்எனவலியுறுத்தி காலிமுகத்திடலில் தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், போராட்டக் களத்தில் நேற்றுமுன்தினம் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதற்குப் பல தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் மக்கள் ஐக்கியப்படும் வேளையில் பிரிவினை எதற்கு எனவும் அந்தத் தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நேற்று மாலை தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

## கோட்டா வீட்டுக்குப் போ!

# யாழில் தீப்பந்தப் போராட்டம்

### பலரும் பங்கேற்று காலிமுகத்திடல் தன்னெழுச்சிக்கு ஆதரவு தெரிவிப்பு



கோட்டா வீட்டுக்குப் போ என்ற கோஷத்துடன் கொழும்பு – காலிமுகத்திடலில் தொடரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்துக்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. ☞ 2

### கோட்டா அரசின் புதிய அமைச்சரவை

## காலை பதவியேற்பு மாலை முதல் கூட்டம்

புதிய அமைச்சரவை இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் புதிய அமைச்சரவையின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இன்று மாலை இடம்பெறக்கூடும் என அரச வட்டாரங்களில் ☞ 2

## "GO HOME GOTA" தலைப்பில் ஜனாதிபதி செயலகம்

### இளைஞர்கள் நேற்றிரவு சாகசம்




காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் ஜனாதிபதி செயலகத்தை வைத்து நேற்றிரவு சாகசம் புரிந்துள்ளனர்.

தொழில்நுட்ப முறைமையைப் பயன்படுத்தி ஜனாதிபதி ☞ 2

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு




லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.

இதற்கமைய, சகல விதமான பெற்றோல் வகைகளின் விலைகளும் 35 ரூபாவால் அதிகரித்துள்ளது.

அத்துடன், சகல ☞ 2

## போராட்டக் களத்தில் கம்பவாரிதி குழுவினர் பங்கேற்பு



காலிமுகத்திடலில் கோட்டாபய அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு கம்பன் கழகத்தின் நிறுவுநர் கம்பவாரிதி ஜெயராஜ் ☞ 2

## பல்கலை விரிவுரையாளர்களும் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு

### நாளை காலிமுகத்திடல் நோக்கிப் பேரணி

கொழும்பு – காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக நடத்தப்படும் பொதுமக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அடையாளப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

பொதுமக்களின் ☞ 2

## பொலிஸ் இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்!

இலங்கையில் நெருக்கடி நிலைமை வலுத்துள்ள நிலையில் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது நேற்று சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதனால் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் செயலிழந்துள்ளது எனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. ☞ 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டிருப்பதாக ஒரு தகவல். கடைசியில் செய்தி அவர் நீடிப்பார் என்று அமைந்தது.

பெரும்பாலும் சீனியர் அமைச்சர்கள் பலர் 'அவுட்'. தங்களுக்கு இடம் கிடையாது என்பதை சூசகமாக முற்கூட்டியே அறிந்து கொண்ட சிலர், 'எட்டாப் பழம் புளிக்கும்' என்ற மாதிரி எங்களுக்குத் தேவையில்லை என்ற பாணியில் முதலிலேயே அறிவித்தல் கொடுத்து விட்டனர். பந்துல குணவர்த்தன, சரத் வீரசேகரா வகையறாக்கள் இந்த அணியில். பதவி கிடைக்காவிட்டாலும், வீழ்ந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறிக் கொள்ளலாம் அல்லவா?

வயது குறைந்த இளம் பிரமுகர்கள் பலருக்கும்தான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பதவி. அதனால் இதுவரை இராஜாங்க அமைச்சர்களாக இருந்த பலருக்கும் 'புரமோஷன்'.

முன்னாள் சீனியர் அமைச்சர்கள் இப்போது வெற்று வேட்டாகப் போகிறார்கள். அவர்களின் சங்கடங்களைத் தவிர்க்க மூத்த அமைச்சர்கள் குழுமம் என்ற சாரப்பட்ட ஓர் ஆலோசனைச் சபையை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். இந்த ஆலோசனைச்சபையினர் அவ்வப்போது கூடி, புதிய இளம் அமைச்சர்களுக்கு தகுந்த வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குவதாக ஏற்பாடு.

எனக்கு என்னவோ இன்றைய அமைச்சரவைப் பதவியேற்பு, இங்கு அரசியல் புயலை மேலும் வீறு கொள்ள வைக்கும் என்றே தோன்றுகின்றது.

காலையில் அமைச்சரவை பதவியேற்றதும் மாலையில் அமைச்சரவைக் கூட்டம். அதற்கிடையில் ஆளும் தரப்பில் இருக்கும் முக்கியஸ்தர்கள் சிலர் உட்பட்ட ஓரணி ஆளும் தரப்பிலிருந்து சுயாதீனமாகச் செயற்படப்போவதாக அறிவிக்கும் என்றும், அதையடுத்து நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மை இழக்கப்படுவது பற்றிய உறுதிப்பாடு தெளிவாகி விடும் என்றும் ஆளும் தரப்புடன் தொடர்புடைய சில வட்டாரங்கள் எதிர்வு – ஹேஸ்யம் – கூறுகின்றன.

இதனால் நாளை நாடாளுமன்றத்தில் அரசுக்குப் பெரும்பான்மை இல்லை என்பதை உறுதிப்படுத்தும் காய் நகர்த்தலுக்கு எதிரணிகள் தீவிரமாக முஸ்தீபுகள் செய்யும். ஆனால் அதுவும் சரிப்பட்டு வராது என்று ஆருடம் கூறுகின்றன அந்தத் வட்டாரங்கள்.

இன்று காலையில் புதிய அமைச்சரவை பதவியேற்றதுமே ஆளும் தரப்பில் உள்வீட்டுக் குழப்பம் ஆரம்பமாகலாம் என்பதை அரசுத் தலைமை எதிர்பார்த்தே காத்திருக்கின்றது.

இன்று மாலையில் புதிய அமைச்சரவையின் முதல் கூட்டத்திலேயே நாடாளுமன்றத்தை அடுத்த இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் பிரகடனத்தைத் தாம் வெளியிடவிருக்கின்றார் என்ற முடிவை ஜனாதிபதி விடுக்கக் கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

சிரேஷ்ட நிலையில் இருக்கும் பல மூத்த முன்னாள் அமைச்சர்களை வெட்டி ஒதுக்கி, பல இளமுகங்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுப்பது தொடர்பில் ஆளும்தரப்புகளின் 'பழசுகள்' உள்கட்சிப் புரட்சி பண்ணாமல் சகித்துக் கொண்டாலும் –

இந்த அமைச்சரவைப் பதவியேற்பு 'கோட்டாகோகமவில்' காத்திரமான தாக்கத்தை – அதிருப்தியை – அதனால் மக்கள் குழப்பத்தை – இலகுவில் ஏற்படுத்தி விடும் ஏது நிலைகளும் தென்படுகின்றன.

எப்படிப் பார்த்தாலும் குரு பெயர்ச்சி பலன் இன்று முதல் வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

# அமைச்சுப் பதவி வேண்டாம்!

## டலஸும் அதிரடி அறிவிப்பு



புதிய அமைச்சரவையில் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த 3ஆம் திகதியேதான் முடிவொன்றை எடுத்துவிட்டார் எனவும், அந்த முடிவில் உறுதியாக இருக்கின்றார் எனவும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு, பிரச்சினைக்கான தீர்வாக அமையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போராட்டக் களத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையிலான குழுவினர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

போராட்டக் களத்துக்கு நேற்று அவர்கள் நேரடியாகச் சென்று அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

இந்து மக்கள் சார்பாகக் காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்டோம் என்று கம்பவாரிதி ஜெயராஜ் தெரிவித்தார்.

## காலை பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து அறியமுடிகின்றது.

அமைச்சரவையில் 15 பேருக்கே இடமளிக்கப்படவுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ தவிர ஏனைய ராஜபக்ஷக்கள் அமைச்சரவையில் இடம் பெறமாட்டார்கள்.

அத்துடன், புதுமுக உறுப்பினர்கள் அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

## யாழில் தீப்பந்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். பண்ணைக் கடற்கரையில் இரவு 7 மணியளவில் அமைதியாக ஆரம்பித்த தீப்பந்தப் போராட்டம் பண்ணைப் பாலத்தில் இருந்து பண்ணைச் சுற்றுவட்டம் வரை பேரணியாகச் சென்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் இளையோர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் கோட்டா வீட்டுக்குப் போ, குடும்ப ஆட்சியில் நாட்டைச் சூறையாடாதே!, ராஜபக்ஷக்கள் அனைவரும் வீட்டுக்குப் போக வேண்டும், இனப்படுகொலைக்கு நீதி வேண்டும், எங்கே எங்கே எங்கள் உறவுகள் எங்கே?, சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

## பொலிஸ் இணையத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனைச் சீர்செய்யும் முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப் புக்கள் ஈடுபட்டுள்ளன எனவும் பொலிஸ் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது

## "GO HOME GOTA"....

செயலகத்தை மின்னொளியில் ஒளிரச் செய்து ராஜபக்ஷக்கள் அணியும் சால்வையை ஜனாதிபதி செயலகத்துக்குத் தொழில்நுட்ப முறையில் சாத்தி இருந்தனர்.

அதுமாத்திரமின்றி எதிர்ப்பு வாசகங்களும் ஜனாதிபதி செயலகத்தில் பிரதிபலிக்கும் வகையில் அந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற தொழில்நுட்பத்துறையில் பாண்டித்தியம் பெற்றுள்ள இளைஞர்களாலேயே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

# பாடசாலை நேரத்தை நீடிக்கும் திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாம்!

பாடசாலை நேரத்தை ஒரு மணிநேரத்திற்கு அதிகரிக்கும் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி, பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தில் அதிகரிக்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்த தீர்மானத்தை கைவிட கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# கர்தினாலின் குரலுக்கு செவிசாய்க்க கல்முனை கிறிஸ்தவர்கள் வற்புறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இது வரை நீதி கிடைக்கவில்லை எனவும் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்து கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் கவன வீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்றைய ஆராதனையின் பின்னர் மேற்கொண்டனர்.

கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன் தலைமையில் இக்கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது போராட்டகாரர்கள் 'கர்தினாலின் குரலுக்கு செவிசாயுங்கள்', 'இனவாதம் காட்டி உறவுகளை பிரிக்காதீர்கள்!', 'இறந்து போனவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி', 'இறந்து போனவர்களுக்கு நீதி வேண்டும்', 'இனவாதம் காட்டி எங்களைப் பிரிக்காதீர்கள்!', 'பயங்கரவாதத்தினை நிறுத்துங்கள்!, !அரசன் அன்று கொல்வான்; இறைவன் நின்று கொல்வான்!' என அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்கள் தாங்கிபடி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை இந்தப் போராட்டத்திற்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 3 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அதனை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட திருப்பலிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதமான டீசல் வகைகளின் விலைகளும் 75 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விற்பனை விலை 338 ரூபாவாகும்.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விற்பனை விலை 367 ரூபாவாகும்.

## பல்கலை விரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாழ்வுரிமைக்காகக் காலிமுகத்திடலில் நடத்தப்படும் போராட்டத்துக்கான தமது தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்புப் பல்கலைக்கழக முன்றிலில் இருந்து காலிமுகத்திடல் நோக்கி இந்த அடையாளப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நேரடியாக இந்த அடையாளப் பேரணியில் கலந்து கொள்வார்கள் எனவும், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் அதேகாலப் பகுதியில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் அடையாளப் போராட்டத்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதி கிட்டாத ஈஸ்டர்

**நாட்டின் தலைவர் என்ற முறையில் தேசிய திருநாள்கள், பண்டிகைகளை ஒட்டி நாட்டு மக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் விடுப்பது ஜனாதிபதியின் கடமை.**

**நேற்றுக் கழிந்த ஈஸ்டர் பண்டிகையை ஒட்டியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செய்தி வெளியிட்டிருக்கின்றார். அந்த மத வைபவத்தை அனுஷ்டிக்கும் கிறிஸ்தவ மக்களுக்கான செய்திஅது.**

**ஆனால் அந்தக் கிறிஸ்தவ மக்களில் கணிசமானோர் ஜனாதிபதி மீது செம காட்டத்தில் – சீற்றத்தில் – கோபத்தில் – விசனத்தில் – இருக்கின்றார்கள். அது அவருக்கும் கூட தெரிந்த விடயம்தான்.**

**அந்தக் கிறிஸ்தவ மக்களை ஆசுவாசப்படுத்தி, அமைதிப்படுத்தி, சாந்தப்படுத்துவதற்குப் போதிய அம்சங்கள் ஏதும் ஜனாதிபதியின் அந்த வாழ்த்துச் செய்தியில் இல்லை என்பதுதான் உண்மை.**

**"எங்கள் சகோதர, சகோதரிகள் இந்த ஈஸ்டரை வழக்கமான பண்டிகை உற்சாகத்துடன், கொண்டாட முடிகின்றது என்பது எனது நம்பிக்கை" – என்ற வாசகங்கள் மூலம், கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தி, நீங்கள் ஒன்று கூடிப் பண்டிகையைக் கொண்டாடக் கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்ற செய்தியை கிறிஸ்தவ மக்களிடம் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**ஆனால், கிறிஸ்தவ மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி கோட்டாபய தொடர்பில் வேறு ஆழமான – மனதை நெருடுகின்ற – மன சஞ்சலத்தைத் தருகின்ற – ஓரம்சம் உண்டு. அது தொடர்பில் வழமை போல தெளிவான பதில் ஏதும் ஜனாதிபதியிடமிருந்து இந்த வாழ்த்துச் செய்தியில் வரவில்லை என்பதுதான் நிலைமை.**

**மூன்று ஆண்களுக்கு முன்னர் நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிட்டவில்லை, உண்மைகள் கண்டறியப்படவில்லை, பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவில்லை என்பதுதான் கிறிஸ்தவ மக்களின் ஆதங்கம், விசனம், எரிச்சல், சீற்றம் எல்லாமுமே.**

**இலங்கைக் கிறிஸ்தவ மக்களின் சார்பில் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனை வெளிப்படையாகவே தெரியப்படுத்தியிருக்கின்றார்.**

**அந்த விடயம் தொடர்பில் வழமை போல நீதியை உறுதி செய்வோம், உரிய மற்றும் வழமை முறையான விசாரணைகளை நடத்தி, சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்பன போன்ற வாய்ப்பந்தல் உறுதி மொழிகளை தமது வாழ்த்துச் செய்தியில் வழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**நீதியை எதிர்பார்த்துச் சீற்றத்துடன் காத்திருக்கும் இலங்கைக் கிறிஸ்தவ மக்களை இந்த வெறும் உறுதி மொழி உச்சாடனம் திருப்திப்படுத்தப் போவதில்லை.**

**இவ்விடயம் தொடர்பில் கிறிஸ்தவ மக்களின் – பாதிப்புற்ற தரப்பினரின் – ஆதங்கத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் பொதிந்துள்ளன.**

**ஒன்று – இந்தத் தொடர்குண்டு வெடிப்புத் தாக்குதல்களை நடத்தியோரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுப்பது.**

**இரண்டாவது – இந்தத் தாக்குதலின் மூலம் குறுகிய காலத்தில் பெரும் அரசியல் லாபமீட்டியோர் அதற்காக இந்தத் தொடர் தாக்குதலைத் தூண்டி, வழிப்படுத்தி, செய்வித்தனரா என்று கிளப்பப்படும் சந்தேகம்.**

**அந்த வகையில் பார்த்தால் இரண்டாவது விடயத்தில் குற்றச்சாட்டு விரல் முதலில் நீள்வது தற்போதைய ஆட்சித் தரப்பை நோக்கித்தான்.**

**தனக்கு எதிரான விசாரணையை நியாயமான முறையில் எந்த ஆட்சித் தரப்பும் நடத்தும் என எதிர்பார்ப்பது – விசேடமாக இந்த ஆட்சித் தரப்பு நடத்தும் என பார்த்திருப்பது – விவேகமற்ற நம்பிக்கைதான். அதுதான் கிறிஸ்தவ மக்களின் இன்றைய சீற்றத்துக்கும் அடிப்படைக் காரணமும் கூட.**

## வவுனியாவில் வாகனங்களை இடித்து மோதித் தள்ளியபடி தப்பிச் சென்ற ஹயஸ் மடக்கப்பட்டது; 4 பேர் படுகாயம்!







வவுனியா நகரப்பகுதியில் வேகமாகச் சென்ற ஹயஸ் ரக வாகனம் ஓட்டோ மற்றும் மோட்டர் சைக்கிள்களை மோதித் தள்ளிக் கொண்டு தப்பிச் சென்றதில் 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5.45 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

யாழ் வீதி ஊடாக ஏ9 வீதியில் வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர்களை மோதித் தள்ளிவிட்டு நிறுத்தாமல் சென்றதுடன், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக நகரில் இருந்து யாழ் வீதி நோக்கிச் சென்ற இரண்டு ஓட்டோகளையும் மோதித்தள்ளியது.

தொடர்ச்சியாக நிறுத்தாமல் சென்ற அந்த ஹயஸ் ரக வாகனம் இலுப்பையடிப் பகுதியில் மேலும் ஒரு ஓட்டோவை மோதித்தள்ளியதுடன், அங்கிருந்தும் ஹொரவப்பொத்தானை வீதி வழியாக சென்று வான் ஒன்றையும் இடித்த பின்னர் தொடர்ந்தும் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் அந்த வாகனத்தை துரத்திச் சென்றனர். பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப்படையினரும் அந்த வாகனத்தினை துரத்திச் சென்றனர்.

அதிவேகமாக சென்ற வாகனம் அநுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவப்பொத்தானை பகுதியில் வைத்து பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா நகரப்பகுதியில் 46 வயதுடைய ஆசிகுளம்வாசி, 29 வயதுடைய மடுகந்தைவாசி, 46 வயதுடைய திருநாவற்குளம்வாசி, 40 வயதுடைய உக்குளாங்குளம்வாசி ஆகிய நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய அசம்பாவிதங்கள், பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளிவரவில்லை.

அந்த வானின் சாரதி மது போதையில் இருந்தாரா அல்லது போதைப்பொருள்கள் எதனையும் கடத்திச் சென்றாரா என்ற கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 4 மணி 20 நிமிடங்கள் இன்று மின்வெட்டு

நாட்டில் இன்றைய தினம் மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, இன்றைய தினம் நாட்டில் 4 மணித்தியாலம் 20 நிமிடம் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

அதன்படி, காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை 4 மணி 20 நிமிடங்கள்வரை மின்வெட்டை இருபிரிவுகளாக மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## அமைதி, ஒழுங்கை நிலைநாட்ட ராணுவம் அழைக்கப்பட்டால் மட்டுமே களமிறங்கும்!

### பாதுகாப்புச் செயலாளர் விளக்கம்



அமைதியான போராட்டக்காரர்கள் மீது பல பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு இராணுவ அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் திட்டம் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஓய்வுபெற்ற கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அமைதியான போராட்டங்கள் தொடர்பில் ஊழல்மிக்க ஆட்சியாளர்கள் வழங்கும் –சட்டத்திற்கு முரணான – உத்தரவுகள் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் சிந்தித்து செயற்பட வேண்டும்' என முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா வலியுறுத்தியிருந்த நிலையில், அவரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இலங்கையில் ஜனநாயக முறைப்படி முன்னெடுக்கப்படும் அமைதியான போராட்டங்களை ஒடுக்க இராணுவப் படைகள் நிறுத்தப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

தேசத்தைப்பாதுகாப்பதற்கும், அரசமைப்பை நிலைநிறுத்துவதற்கும், வன்முறை எழுச்சி ஏற்பட்டால் – இலங்கையர்களிடையே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் உதவி கோரப்பட்டால் – மாத்திரமே இராணுவம் பொலிஸாருக்கு உதவும் என பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

அமைதியான போராட்டக்காரர்கள் மத்தியில் சென்று மோதலை தூண்டியோ அல்லது குண்டுவெடிப்பை செய்தோ கூட்டத்தை கலைக்க உளவுத்துறையினர் முயற்சி செய்யலாம் என சமூக ஊடகங்களில் வெளியாகும் பதிவுகள் உண்மைக்கு புறம்பானவை எனப் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான போராட்டங்கள் என்ற பெயரில் பொதுச் சொத்துக்கள் அல்லது தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்த வித விதமான போராட்டங்களால் நமது தமிழ் மக்களுக்கு எதுவும் கிட்டாது

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் செயலர் எரிச்சல்




**கோட்டாபய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் வித விதமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எமது மக்களுக்கும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன பிரயோசனம் என வடக்கு,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராஜா தெரிவித்தார்.**

**நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எரிபொருள் பிரச்சினை, மின்சார நெருக்கடி போன்றவை நாட்டின் வாழ்வாதாரத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் எமது வடக்கு, கிழக்கு தமிழர்கள் இதைவிட பெரியளவிலான பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வந்தவர்களே. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சிங்கள மக்களால் சமாளிக்க முடியாதுள்ளது. 69 லட்சம் மக்களால் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதியையும் அவர்களது குடும்பத்தினரையும் இன்று வீட்டுக்கு அனுப்புவதற்காக மக்கள் வீதிக்கு இறங்கி போராடுகிறார்கள்.

கடந்த காலத்தில் எமது குழந்தைகள் கஞ்சியைப் பெறுவதற்கான வரிசையில் நின்றபோது அதைக்கூட நிற்க விடாது குண்டுகளாலும் கிபிர்களாலும் தாக்குதல் நடத்தியமையை யாரும் மறந்திருக்க நியாயமில்லை.

இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட உயிராபத்தை தடுப்பதற்காக ஒட்டுமொத்தமாக அப்போதிருந்த அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக ராஜினாமா செய்திருந்தால் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் ராஜினாமாச் செய்யவில்லை. அனைவரும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஒளித்து வாழ்ந்தார்கள். இதனால் மக்களை அழிக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தற்போது உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளும் இந்த கோட்டாபய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் வித விதமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எமது மக்களுக்கும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன பிரயோசனம் ஏற்படும் என்பதே எமது கேள்வி.

நல்லாட்சி என்று கொண்டுவரப்பட்ட அரசாங்கம் இருக்கும் வேளையில் மேற்கத்தைய நாடுகள் எமது போராட்டத்தை அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. ஜெனிவாவில் காலக்கெடு வழங்க வேண்டாம் என்று கூறியும் கூட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதேச்சாதிகாரமாக அந்தக் கால நீடிப்பை வழங்கி ஒத்துழைத்திருந்தனர்.

ஜனாதிபதி பதவியை ஒழிப்பதால் எமக்கு என்ன கிடைக்கப் போகிறது? சிங்களவர்களுக்கு உதவி செய்வதாக மட்டுமே இருக்கும். பிரச்சினை நாளை தீர்ந்துவிட்டால் அவர்கள் எம்மை அம்போ என்று கைவிட்டு தமது பாட்டை பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள்.

அரசியல் மாற்றத்தில் எமக்கு நம்பிக்கையில்லை. ராஜபக்ஷ அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் சர்வஜன வாக்கெடுப்பை தமிழ் மக்கள் மத்தியில் நடத்த வேண்டும். அதை வேறு எந்த சக்திகளும் தீர்மானிக்க முடியாது. – என்றார்.

## ஆரையம்பதி பாலமுனைச் சந்தியில் ஓட்டோ - பஸ் நேருக்கு நேர் மோதல்

### நான்கு பேர் படுகாயம்



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி ஆரையம்பதி பாலமுனை சந்தியில் தனியார் பஸ்ஸும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் நேற்றுப் பிற்பகல் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து களுவாஞ்சிக்குடியை நோக்கிப் பிரயாணித்த தனியார் பஸ்ஸும் களுவாஞ்சிக்குடியில் இருந்து மட்டக்களப்பை நோக்கிப் பிரயாணித்த ஓட்டோவும் ஆரையம்பதி பாலமுனை சந்தி வீதி வளைவில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் ஓட்டோச் சாரதி உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மட்டு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமது நேரத்தை மகிழ்ச்சியாகச் செலவிடவே காலிமுகத்திடலில் இளைஞர்கள் கூட்டமாம்

### கெஹெலிய ரம்புக்வெல எம்.பி. விமரிசனம்

மகிழ்ச்சியாகத் தமது நேரத்தைச் செலவு செய்வதற்காகவே காலிமுகத்திடலில் இளைஞர்கள் கூடியுள்ளனர் – சிறந்த நோக்கங்களிற்காக அல்ல என அரச தரப்பு எம்.பியான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பெறுமதியான நோக்கங்களிற்காக காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்களிற்காக ஒன்று சேர்ந்துள்ள இளைஞர்களின் நோக்கங்கள் குறித்து கேள்விகள் உள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், முக்கியமற்ற ஒன்றுகூடல்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்பாடு செய்கின்றனர் எனக் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை எனக் காண்பிப்பதே எதிர்க்கட்சியின் கடமை எனத் தெரிவித்துள்ள அவர் பெரும்பான்மை இல்லாத சூழ்நிலையேற்பட்டால் தாங்கள் எதிர்க்கட்சியை நோக்கி செல்லவும் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'கோட்டா கோ ஹோம்' என்பதன் அர்த்தம் – உள்ளடக்கம் – குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர், அரச தலைவர் பதவி விலகினால் ஆட்சிபொறுப்பை யார் ஏற்பது போன்ற விடயங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எந்த அரசியல்வாதியும் நாட்டை வேண்டுமென்றே வங்குரோத்து நிலைக்கு தள்ளப்போவதில்லை. தவறுகள் இடம் பெற்றுள்ளன. அதனை திருத்துவதற்கு அரசாங்கம் முயல்கின்றது – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சிக் கட்டமைப்பு இல்லாமல் நாட்டை பின்னோக்கிச் செல்ல அனுமதிக்க முடியாது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் போல அல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் அர்த்தபூர்வமானவையாக காணப்படவேண்டும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு கோட்டா கோகமவில் மாந்திரீக பூஜைகள்!



கொழும்பு, ஏப்ரல் 18

கொழும்பு – காலி முகத்திடலில் போராட்டக் களத்தில் (கோட்டாகோகமவில்) அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான மாந்திரீக பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிகொடுக்காத நிலையில் நேற்று முன்தினம் இப்பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 9 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தப் போராட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், பில்லி சூனியம் செய்வதற்கென்று மாத்தறையில் இருந்து வந்த ஒருவர் விசேட பூஜை வழிபாடுகளை செய்துள்ளார்.

பெரும்பான்மை இன மக்களால் பல கோரிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் ராஜபக்ஷ அரசாங்கம் பதவி விலகாததால் இவ்வாறு பில்லி சூனியம் வைத்து அவர்களை வீட்டுக்கு அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சமூக வலைத்தளங்களில் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir

# ராஜபக்ஷ குடும்பத்தினரின் பொக்கட்டுகளில் டொலர்கள் எல்லாம் குவிந்து கிடக்கின்றன!

## திருக்கோவிலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ காட்டம்




(காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் டொலர்கள் இல்லை இல்லை என்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன் நாட்டிலுள்ள டொலர்கள் எல்லாம் ராஜபக்ஷக்கள் பொக்கட்டுகளில் இருக்கின்றன.

– இவ்வாறு நேற்று முன்தினம் திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்களை வழங்கி வைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

சஜித் பிரேமதாஸவின் அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசத்துக்கான இணைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் ஏற்பாட்டிலே சுவாசம் வேலைத்திட்டத்தின் கீழ் திருக்கோயில் ஆதார வைத்தியசாலைக்கு 26 லட்சத்து 54ஆயிரம் ரூபாவுக்கான வைத்திய உபகரணங்களும் பனங்காட்டு வைத்தியசாலைக்கு 21 லட்சத்து 34 ஆயிரம் ரூபாவுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:–

நாட்டில் லஞ்சம், ஊழல், திருட்டு, களவு அதிகரித்திருக்கின்றன. இன்று நாடு அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. பொறுமை காத்த மக்கள் வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆர்ப்பாட்டமும் கியூ வரிசையும். காலி முகத்திடலில் இளைஞர்களும் யுவதிகளும் கடந்த பல நாள்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எந்த விதமான அரசியல் தலையீடுகளுமின்றி அவர்கள் சுயமாக முன்வந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். சுதந்திரமாக நாங்கள் வாழ வேண்டும், விஷம் போல் ஏறி உள்ள விலைவாசியை குறைக்க வேண்டும் என்றெல்லாம் கூறி அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிச்சயமாக எமது அரசாங்கம் அமையப் போகின்றது. நான் ஜனாதிபதியாக வருவேன். எமது அரசில் இப்பொழுது லஞ்சம், ஊழல் கொள்ளையிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அவர்களிடம் உள்ள அனைத்து டொலர்களையும் பறிமுதல் செய்து மக்களுக்காக நாங்கள் முதலீடு செய்ய இருக்கிறோம். காலிமுகத்திடலில் கூடியுள்ள மக்கள் தங்களுக்காக அல்லது கட்சிக்காக அந்த ஆர்ப்பாட்டத்தை செய்யவில்லை. நாட்டிலுள்ள 2 கோடியே 22 லட்சம் மக்களுக்காகச் செய்கின்றார்கள்.

உண்மையிலே பாதுகாப்பு படையினர், பொலிஸார் மக்களுக்காகச் செயற்பட்டு வருகின்றார்கள். இந்த வகையிலே அரச கூலிப்படையினர் ஆர்ப்பாட்டத்தை நசுக்குவதற்கு முற்படுகின்றனர் என நாங்கள் அறிகிறோம் .

படையினர் அரசகூலிப்படை அல்லர். அவர்கள் யாருக்கும் அடிபணிய மாட்டார்கள். மக்களை பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை படையினருக்கும் பொலிஸாருக்கும் இருக்கிறது.எமது நாட்டு படையினரும் பொலிஸாரும் தரமானவர்கள். அவர்கள் எந்த ஒரு கட்டத்திலும் இந்த அரச கூலிப்படையாக மாற மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை .

இந்த வேளையிலே நாட்டிலே எதையெடுத்தாலும் பற்றாக்குறை. வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு. இதனை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த பொழுதிலும் வெளிநாட்டு உதவிகள் பெற்று இந்த உதவிகளை வைத்தியசாலைகளுக்குச் செய்து வருகிறோம்.

அதாவது மக்களது வாக்குகளை பெற்றுவந்த அரசாங்கம் விமானங்களை கொள்வனவு செய்யவும் அதிவேகப் பாதைகளை நிர்மாணிக்கவும் கோடிக் கணக்கில் நிதியை ஒதுக்கி வருகிறது.

இன்றைய இந்த பொருளாதார முடக்க நிலையில் இது அவசியமா? எனக் கேட்கிறேன். அதிவேகப் பாதைக்கு நிதி ஒதுக்கினால் அதிவேகமாக கொள்ளை அடிக்கலாம் என்பதற்காகவே அவர்கள் இதனை செய்கின்றார்கள்.

இதை விட வேறு காரணம் இருக்க முடியாது. நாடும் நாட்டு மக்களும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இந்த விமானங்கள், அதிவேகப் பாதைகள் தேவையா? – இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரனை வாக்கெடுப்பில் பலரின் முகத்திரை கிழியும் என்கின்றார் மனோ



அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாக்கெடுப்புக்குக் கொண்டு வருவோம். அப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்போர், எதிர்ப்போர், நடுநிலை வகிப்போர் யாரென அறியும் வாய்ப்பு வருகிறது. பலரின் முகத்திரை கிழிந்து உண்மை சுயரூபம் அம்பலமாகும்.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

225 எம்.பிக்கள் கொண்ட நாடாளுமன்றத்தில், ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு பெரும்பான்மை இல்லை. ஏனைய எதிர்க் கட்சிகளைச் சேர்த்தாலும் பெரும்பான்மை இல்லை. இது எமக்குத் தெரியும். இது ஒன்றும் பரம இரகசியம் அல்ல.

எனினும் நாம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாக்கெடுப்புக்குக் கொண்டு வருவோம். அப்போதுநம்பிக்கையில்லாபிரேரணையை ஆதரிப்போர், எதிர்ப்போர், நடுநிலை வகிப்போர் யாரென அறியும் வாய்ப்பு வருகிறது.

இன்று தெற்கு, மலையகம், மேற்கு, வடக்கு, கிழக்கு என நாடு முழுக்க அரசை எதிர்த்துப் போராடும் மக்கள், தாங்கள் வாக்களித்து தெரிவு செய்த எம்.பிக்களின் இலட்சணங்களை அறிய அரிய வாய்ப்பு வருகிறது.

ஆதரிப்போரும், நடுநிலை வகிப்போரும் மக்கள் மன்றங்களில் துகிலுரியப்படுவார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஜனாதிபதி கோட்டாபயவின் ஒட்டுமொத்த அரசாங்கத்துக்கும் எதிரானதாகும்.

அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் எமது தமிழ் முற்போக்கு கூட்டணி கையெழுத்திட்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணிக் கட்சி–யாக நாமும் இணைந்தே இதைக் கொண்டு வருகிறோம்.

இந்நிலையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது ஜனாதிபதி, பிரதமர் ஆகிய தனிநபர்களுக்கு எதிரானது எனக் காட்டி தப்ப எவரும் முயலக் கூடாது. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிராகவும் நாம் அவசிய நடவடிக்கைகளை எடுப்போம். இவர்கள் இருவரையும் காட்டு காட்டென நாம் காட்டுவோம்.

ஆனால் இது முதலில் முழு அரசாங்கத்துக்கும் எதிரானதாகும். அரசாங்கத்திலிருந்து வெளியே வந்ததாக சொல்லும் அனைவரும் இதை ஆதரிக்க வேண்டும். முட்டாள் காரணங்களை சொல்லி எவரும் மக்களை முட்டாளாக்க முயலக் கூடாது. – என்றார்.

# விபத்துக்கள், அனர்த்தங்களில் ஆறு பேர் வரையில் உயிரிழப்பு

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில், இடம்பெற்ற மூன்று வாகன விபத்துக்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

தொடுவாவ, எஹெலியகொட மற்றும் பேராதனை ஆகிய இடங்களிலேயே இந்த வாகன விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை தெதுரு ஓய நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார் என கொபெயிகனே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொபெயிகனே பிரதேசத்தில் நீராடச் சென்ற 21 வயதுடைய இளைஞனை தேடும் பணியில் கடற்படையினர், பொலிஸார், பொதுமக்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். வாழைச்சேனை கானாத்தன குளத்தில் நீராடச் சென்ற ஒருவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போராட்டக்காரர்களை அடக்குவதற்கு முயன்றால் எம்.பிக்கள் களமிறங்குவர்!

## ஐந்து பேர் முன்னறிவிப்பு

அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பதவி விலகுமாறு கோரி காலி முகத்திடலில் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வரும் பெருந்திரளான மக்களுடன், தேவையெனில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன மற்றும் ஹெக்டர் அப்புஹாமி போன்றோரும் இணைந்து கொள்ள தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கட்சி பேதங்களை மறந்து, தேவை எழுந்தால் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுடன் இணைந்து கொள்ள நாம் தயாராகவுள்ளோம் என ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபடுவோரை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கைகோர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறையான செயற்பாடுகளைக் கண்டு சளைக்க வேண்டாம் எனவும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களை இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஆட்சியைக் கைப்பற்றித் தக்க வைப்பதற்கு ஓரினத்தின் மீது சுமத்தப்பட்ட அபாண்டக் குற்றச்சாட்டுகள் அம்பமாகியுள்ளன

## மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு

(ஹஸ்பர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ் நிலை, அத்தியவசிய பொருள்கள், எரிபொருள், அந்நியச் செலவாணி, டொலர் பிரச்சினை என்பன காரணமாக சாதாரண பொது மக்கள் தொடக்கம் அரச ஊழியர்கள் உட்பட அனைத்து மக்களையும் நேரடியாக பாதித்துள்ளது என முன்னாள் பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்–

இது எந்தவொரு அரசியல் பிண்ணனியும் இன்றி தொடர் மக்கள் போராட்டமாக மாறியுள்ளது. ஜனாதிபதியின் வதிவிடம், செயலகம் வரை தொடர் போராட்டமாக நடந்தேறியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலை ஒரு சமூகத்தின் மீது பழி சுமத்தி, ஆட்சியைக் கைப்பற்றியமை போன்று ஜனாதிபதியின் இல்லத்தின் முன் இடம் பெற்ற மக்கள் போராட்டத்தை அரபு வசந்தம் என அதே சமூகத்தை வீண் பழி சுமத்திக் கூறி, மீண்டும் ஆட்சியைத் தக்கவைத்த எத்தனித்தனர். ஆனால் முஸ்லிம் சமூகம் அப்படிப்பட்ட துரோகங்களைச் செய்யவில்லை என பௌத்த, கிறிஸ்தவ உயர் பீடங்கள், ஏனைய சமூகங்கள் புரிந்து கொண்டன.

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு இந்த நாட்டில் உறுதிசெய்யப்பட்ட நிலையில் அன்று திகண, அம்பாறை, பேருவளை, குருநாகல் போன்ற இடங்களில் இனக்கலவரத்தை உருவாக்கிய ஆட்சியாளர்களுக்கும், பொதுபலசேன அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் போன்றவர்களுக்கும், இனவாதிகளுக்கும் இங்கு இடமில்லை என்பதை மக்கள் தமது போராட்டம் மூலமாக – சகல இனங்களும் இணைந்து ஒருமித்த நிலைப்பாட்டில் ஆட்சியாளர்களுக்கு எதிராக கோசமிட்டு – காட்டியுள்ளார்கள்.

இந்த நாட்டின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆட்சியாளர்களுக்கும் எதிரணியினருக்கும் இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எதிர்க்கட்சி செயற்படுகிறதா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுகின்றது.

மைத்திரிபால தலைமையில் 16 க்கும் மேற்பட்டவர்களும், விமல் வீரவன்ஸ தலைமையில் 17க்கும் மேற்பட்டவர்களும், அநுரகுமார தலைமையில் 4 க்கும் மேற்பட்டவர்களும், சம்பந்தன் தலைமையில் பத்துக்கு மேற்பட்டவர்களும், கஜேந்திரகுமார், ரணில் விக்ரமசிங்க உட்பட பல கட்சி தலைவர்கள் இருக்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு எதிரான தற்போதைய மக்கள் போராட்டத்தின் போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலிலே கொண்டுவருவது அவசியமல்ல, எதிரணியின் தலைமை அனைவருடனும் பேச வேண்டும். இவ்வளவுக்கும் காரணம் அதி உச்சபீடமான நாடாளுமன்றம் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக அசிங்கப்படுத்தப்பட்டது. 20 ஆவது திருத்தச் சட்டம் நிறுத்தப்பட்டு 19ஆவது சட்டம் நிலை நிறுத்தப்பட வேண்டும். இது அனைத்து தரப்பினருடனும் கதைத்து முதற் பிரேரணையாகக் கொண்டு வரப்பட வேண்டும். இது மட்டுமே மறுசீரமைப்புக்கும் அரசியல் மாற்றத்திற்கும் வழி கோலும்.




தனியார் துறையினரை ஊக்கப்படுத்த வேண்டும். ஏனைய நாடுகளும் இவ்வாறே முன்னேற்றமடைந்தன . விவசாயிகளுக்கு தேவையான சேதனப் பசளை குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறப்படாமையாலேயே விவசாய செய்கை தோல்வி கண்டுள்ளது.

விலை ஏற்றம் காரணமாக அன்று 1500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட யூரியா பசளை இன்று 45,000 ரூபாவுக்கு சென்றுள்ளது. இதனால் விவசாயம் 85 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

டொலரின் விலையேற்றம், புதிய நாணயத்தாள்களின் உற்பத்தி, உள்நாட்டு உற்பத்திகளின் வீழ்ச்சி போன்றவையும் மூல காரணங்களாகச் இருந்தமையை யாரும் மறுக்க முடியாது. – என்றார்.

# குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக கூட்டமைப்பாக ஒன்றுபட்டு முடிவெடுப்போம்

## அதுவே நல்லது என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணை தொடர்பாக, தனியாக முடிவு எடுப்பதை காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரு முடிவு எடுத்தால்தான் அது பலமாக இருக்கும் என புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக முடிவு எடுக்கும்போது அது பலமாக இருக்கும். எந்தவிதமான பிரேரணை கொண்டு வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் மூன்று கட்சிகளும் இணைந்து அப்படி எடுக்க முடியாவிட்டால் நாங்கள் தனியாக தீர்மானிக்க முடியும் என்றும் எங்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களை மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி பாதித்திருக்கின்றது. பொருளாதாரப் பின்னடைவு நிச்சயமாக நீண்ட காலமாக இருந்து வந்த ஒன்று. இந்த நாட்டிலே யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பெருந்தொகையான நிதி, அதற்காகப் பட்ட கடன்கள், அதனால் ஏற்பட்ட அழிவுகள் எல்லாம் சேர்த்தே பொருளாதார பின்னடைவுக்குக் காரணமாக உள்ளன.

போராட்டத்துக்கு ஜனாதிபதி சரியான பதில் ஒன்றை வழங்க வேண்டும். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கூறியே மக்கள் போராடுகிறார்கள். அதனை ஜனாதிபதி செய்ய மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

இதேவேளை, இணுவில் பகுதியில் இடம்பெற்ற புளொட் மத்திய குழுக் கூட்டத்தில் அண்மையில் உயிரிழந்த கட்சியின் பொதுச் செயலாளர் அமரர் சு.சதானந்தனின் வெற்றிடத்திற்குத் தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மத்திய குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான கஜதீபன், சிவநேசன் உட்பட கட்சியினுடைய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கைதடியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர் மரணம்

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நுணாவில் கைதடியைச் சேர்ந்த சுப்பர் சுதாகர் (வயது–52) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஞாயிற்றுக்கிழமை கைதடி பாலத்தடியிலிருந்து கைதடிப் பிள்ளையார் கோவிலை நோக்கி சைக்கிளிலில் சென்றுகொண்டிருந்த அவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதில் படுகாயம் அடைந்த அவர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

# அரிசியின் விலையும் எகிறும் உற்பத்தியாளர்கள் விசனம்

எதிர்வரும் காலங்களில் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் பிரச்சினையால், சிறுபோகத்தில் திட்டமிட்டவாறு பயிர்செய்கையை மேற்கொள்ள முடியாவிட்டால் அரிசியின் விலை அதிகரிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். எரிபொருள் மற்றும் உரப் பிரச்சினை காரணமாக எதிர்காலத்தில. நெல் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை, தற்பொழுது நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 210 முதல் 220 ரூபாய்க்கும் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 230 ரூபாவுக்கும், கீரி சம்பா ஒரு கிலோ கிராம் 270 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஏழு வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளான் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி பகுதியிலுள்ள கிணற்றில் விழுந்தே சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நண்பர்களோடு நேற்று முன்தினம் விளையாடிக் கொண்டிருந்த போது பாதுகாப்பற்ற நிலையிலிருந்த கிணற்றில் சிறுவன் விழுந்து மரணமடைந்துள்ளான் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில், சிறுவன் தந்தையின் பராமரிப்பில் வசித்து வந்திருக்கின்றான்.

உயிரிழந்த சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது

# வட்டுக்கோட்டை பற்றைக் காணியில் திருட்டு மாடுகளை வெட்டியோர் கைது

*வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள பற்றைக் காணியில் வைத்து திருட்டு மாடுகள் இரண்டை சட்டத்துக்குப் புறம்பாக இறைச்சிக்காக வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.*

*சுழிபுரத்தைச் சேர்ந்த 36 மற்றும் 40 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.*

*சந்தேக நபர்களிடமிருந்து 40 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.*






# நுட்பியல் அவத்தை-12

# சோலார் பற்றரி

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இலங்கையில் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக சுழற்சிமுறை மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. கடந்த பல தசாப்தங்களில் தற்போது தான் நாடு மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமையும் நீர்மின்உற்பத்தியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி என்பன மின்வெட்டுக்கான காரணமாகச் சொல்லப்படுகின்றது. எதிர்வரும் மாதங்களில்வறட்சிநீடிக்கவாய்ப்புள்ளதால்மின்வெட்டுக்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. சூரியன் இலங்கையில் உச்சம்பெறும் காலகட்டத்தில் அதாவது எரியும் கோடையில் இலங்கையில் மின்வெட்டு தொடரும், அரசியல் கொதிநிலையும் அதிகரிக்கும்.

அதிக வெளிநாட்டுக் கடன், குறைந்த வெளிநாட்டு பணக்கையிருப்பு மற்றும் கொவிட்-19 தொற்று நோயின் நீண்டகால தாக்கம் ஆகியவற்றால், எரிபொருளை வாங்குவதற்கு பணம் இல்லாமல் இலங்கை தத்தளிக்கிறது. ஆசிய வங்கி ஊக்குவித்த வீட்டுக்கூரைகளின் மின்உற்பத்தி செயற்திட்டம் அதற்கான கடனுதவி போன்றன 'சிவப்பு நாடா பொறிமுறை', வங்கிகளின் தாமதமான செயல்திறன் பொறிமுறை போன்றவற்றில் சிக்கி தோல்வியைத் தழுவியிருப்பதும் இன்றைய மின் உற்பத்தி போதாமைக்கான காரணமாகிறது.

இந்த நிலையில் மின்சார உற்பத்தி பற்றிய பேச்சுக்கள் அதிகளவில் கேட்கின்றன. குறிப்பாக சூரியமின் உற்பத்தி பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. அதேவேளை ஏற்கனவே சூரிய மின் கலங்களை தமது வீட்டுக்கூரையில் பொருத்தியவர்கள், தாம் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் தமக்கும் மின்வெட்டின் போது மின்சாரம் இல்லை என்று கவலைப்படுகின்றனர். சூரிய மின் உற்பத்தி நேரடியான பலனை உற்பத்தியாளர் மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் அனுபவிக்க முடிவதில்லை. இதற்குக்காரணம் சூரியமின் உற்பத்தியை சேமித்து மின்சாரம் தடைப்படும் போது பெறுவதற்கான சேமிப்பகங்கள் வீடுகளில் பொருத்தப்படவில்லை என்பதாகும். சூரிய மின்உற்பத்தியின் போது மின்சேமிப்பகங்களான பற்றரிகளில் மின்சாரத்தை சேமித்து அதனை மின்தடையின் போது மீண்டும் பாவிப்பது பற்றி பலரும் இன்று பேசிக்கொள்கிறார்கள். இந்த பற்றரிகளை தெரிவு செய்வது கொள்முதல் செய்வது தொடர்பான விடயங்கள் நோக்கப்பட வேண்டியவையாகின்றன. அதற்கு பற்றரி நுட்பியல் அவத்தையைப் புரிதல் வேண்டும்.

வீட்டு உரிமையாளர்கள் பொதுவாக சிறந்த சோலார் பேனல்களை பொருத்துவதற்கு விரும்புகிறார்கள். அதனை எங்கே பெறலாமென்று தேடுகிறார்கள். அதில் சூரிய மின்சார உற்பத்தியில் தமக்கு மின்வெட்டுக்காலகட்டத்தில் மனிசாரம் கிடைக்கக்கூடியதான மினசாரத்தை சேமிக்கும் பற்றரிகள் பற்றிய தேடலும் அதிகரித்துள்ளது. வீட்டுக் கூரையில் சோலர் பனல்களை அமைக்கும் போது முக்கியமான பகுதிசிறந்தசோலார்பற்றரிகளைக்கண்டுபிடிப்பதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, சூரியன் உதிக்கும் போது மட்டுமே உற்பத்தி செய்யும் சோலார் பேனல்கள், இரவில் அல்லது சூரியன் பிரகாசிக்காத போது மற்றும் மின்வெட்டின் போது பயன்படுத்தக்கூடியதான கூடுதல் மின்சக்தியை சேமித்து வைக்க முடியாது என்றால் அதனால் என்ன பயன்?

சூரிய மின்சக்தியின் பெரிய அளவிலான சாத்தியக்கூறுகளுக்கு மின் சேமிப்பு நீண்டகாலமாக சவாலானதாகவே உள்ளது. தற்போது சோலார் பேனல் பற்றரி தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் வியக்கதக்கதாக வளர்ந்துள்ளது. அதனை நாம் புரிந்து கொள்வது அவசியம். இன்று சந்தையில் ஏராளமான பற்றரிகள் உள்ளன.

**வீட்டுக் கூரையிலிருந்து சூரிய ஒளி மின்சாரம்**

வீட்டுக் கூரையில் சோலார் பேனல்கள் வரிசையாக நிறுவப்பட்டிருக்கும். இந்த சோலார் பேனல்கள் சூரிய-னிலிருந்து சக்தியைச் சேகரித்து மின்னோட்டமாக மாற்றுகின்றன. இது நேரடி மின்னோட்டமாகவே கிடைக்கும். (டி.சி.) பின்னர் இந்த மின்சாரம் ஒரு இன்வெர்ட்டர் வழியாகச் செல்கிறது, அது அதை ஆடலோட்ட மின்னோட்டமாக (ஏ.சி.) மாற்றுகிறது, இந்த மின்சாரமே வீடுகளில் நாம் பயன்படுத்தும் மின்சார வகையாகும். பெரும்பாலான வீட்டு சோலார் பேனல் அமைப்புகள், அதாவது அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மின்சாரசபையால் கொள் முதல் செய்யப்படுகின்றது. இதனால் வருமானமும் கிடைக்கிறது. ஆனால் மின்தடைப்படும் போது மன் சாரம் கிடைக்காது.

இதனால் மின்சாரத்தை சேமித்து மீளவழங்குவதற்கு பற்றரி தேவைப்படுகின்றது. இது சூரிய ஆற்றல் சேமிப்பு அமைப்பாகும், இது கூரையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சேமிக்கும், பின்னர் அதைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. ஒரு சோலார் பற்றரியில் சூரிய சக்தி எவ்வளவு அதிகமாக சேமிக்கப்படுகிறதோ, அவ்வளவு குறைவானளவு மின்சாரத்தையே மன்சாரசபையிடமிருந்து வாங்க வேண்டியிருக்கும்.

இலங்கையில், நீண்டகால மின் தடையின் போது சோலார் பற்றரிகளின் முக்கியத்துவத்தை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். நெருக்கடிக்கு உதவக்கூடியதாகசோலார்பற்றரிகள்காணப்படுவதால் அதனை நாட ஆரம்பித்திருக்கிறார்கள்.

**சோலார் பற்றரி என்றால் என்ன?**




சோலார் பற்றரி என்பது பிற்கால பயன்பாட்டிற்காக மின்சாரத்தை சேமிக்கும் ஒரு சாதனமாகும், இதன் மூலம் மின்தடையின் போது மின் சாதனங்களை இயக்கலாம், வீட்டில் உற்பத்தி செய்யும் சூரிய சக்தியை பயன்படுத்தலாம. இது கார் பற்றரி போன்றவற்றுடன் ஒப்பிடும்போது கணிசமான அளவு மின்சாரத்தை சார்ஜ் செய்து வெளியேற்றும் திறன் கொண்டது. இதன்காரணமாக அவை பெரும்பாலும் 'ஆழமான சுழற்சி பற்றரிகள்' என்று குறிப்பிடப்படுகின்றன.

வீட்டுக் கூரை மின்உற்பத்தியை சேமிக்கும் பற்றரிகள் பல ஆண்டுகளாக சந்தையில் உள்ளன, இப்போது பல வகைகள் மற்றும் அளவுகளில் கிடைக்கின்றன. இது லித்தியம் தொழில்நுட்பத்தின் விரைவான மேம்பாடுகள் காரணமாக, நவீன லித்தியம் பற்றரி அமைப்புகள், பாரம்பரிய லீட்-அமில பற்றரிகளை விரைவாக மாற்றியமைக்கின்றன. ஒரு பற்றரியை தெரிவு செய்யும் போது அதன் அளவு கருத்தில் கொள்ளப்படுகின்றது.

குறைந்த அளவிலான பற்றரிகளைத் தெரிவு செய்யும் போது அது வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான திறன் கொண்டதாக இருக்காது. அதேவேளை பெரிய பற்றரிகள் பொதுவாக குளிர்கால மாதங்களில் பற்றரியை சார்ஜ் செய்ய சூரியசக்தி போதுமானதாக இருக்காது. இந்தச் சிக்கல்களைத் தவிர்க்க, சரியான பற்றரியை தெரிவு செய்ய வேண்டும். சூரிய பனல் அளவு, காப்பு சக்தி, மாலை அல்லது இரவு ஆற்றல் நுகர்வு போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பல்வேறு (லித்தியம்) ஹோம் பற்றரிகள் 8 முதல் 15 வருடங்கள் ஆயுள்காலம் வேலைசெய்யுமென்று பரிந்துரைக்கப்படுகின்றன. பற்றரியின் ஆயுள் காலம் பொதுவாக சார்ஜ் மற்றும் டிஸ்சார்ஜ் சுழற்சிகளின் எண்ணிக்கை அல்லது மொத்த ஆற்றல் செயல்திறன் (kWh) ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு லித்தியம் பற்றரி அதன் உண்மையான திறனில் 30 வீதம் இழந்த பிறகு, அனைத்து பற்றரிகளும் காலப்போக்கில் திறனை இழக்கின்றன, இது பொதுவாக ஒரு நாளைக்கு ஒரு முழு சார்ஜ் சுழற்சியின் அடிப்படையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்கிறது. இருப்பினும், லித்தியம் பற்றரி செல் தொழில்நுட்பம் தொடர்ந்து முன்னேறி வருகிறது. சில வகை பற்றரிகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும்.

இருப்பினும் தற்போது பற்றரியின் ஆயுள்காலம் 3,000 முதல் 4,000 சுழற்சிகள் அல்லது 9 முதல் 12 ஆண்டுகள் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு வீட்டிற்கு ஒரே நேரத்தில் மின்தடையின்போது அதிக மின்சக்தி அளிக்க விரும்பினால், அதிக ஆற்றல் கொண்ட சோலார் பற்றரியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மின்தடையின் போது மோட்டர், மின்விசிறி போன்றவற்றை பாவிப்பதாயின் அதிக ஆற்றலுள்ள பற்றரியை பயன்படுத்த வேண்டும். மின்சாரத்தையும் அதிகம் பயன்படுத்த விரும்பினால், அதிக ரவுண்ட்டிரிப் திறன் கொண்ட பற்றரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இடவசதி குறைவாக இருந்தால், குறைந்த அளவிலான சேமிப்பிடத்தை அதிக அளவில் பெற விரும்பினால், லித்தியம் அயன் நிக்கல் மாங்கனீஸ் கோபால்ட் (NMC) சோலார் பற்றரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். மிக நீண்ட ஆயுள்காலம் கொண்ட பற்றரியை அதிக முறை சுழற்சி செய்ய விரும்பினால், லித்தியம் இரும்பு பாஸ்பேட் (LFP) ) பற்றரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரு பற்றரியின் சக்தி மதிப்பீடு என்பது பற்றரி ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய கிலோவாட் சக்தியைக் குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு பற்றரியின் ஆற்றல் மதிப்பீடு, பற்றரி ஒரே நேரத்தில் எத்தனை சாதனங்களை இயக்க முடியும் என்ற அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# எப்படிப் போராடுவது என்பதைவிட எதற்காகப் போராடுவது என்பதே முக்கியம்!

- பனங்காட்டான் -



மக்களின் தன்னெழுச்சிப் போராட்ட இலக்கைத் தணிக்கவும், காலத்தை இழுத்தடித்து அவர்களின் ஊக்கத்தைக் குலைக்கவும் ராஜபக்ஷக்கள் தந்திரோபாயமாகத் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். காலிமுகத் திடலை காணிவேல் தளமாக மாற்றினால் அது ராஜபக்ஷக்களுக்கே சாதகமாகிவிடும். போராட்டத்தின் வெற்றிக்கு வேகம் மட்டும் போதாது. விவேகம் அதற்குத் துணையாக்கப்பட வேண்டும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள காலிமுகத் திடல் மிகவும் பிரசித்தமானது.

நாட்டின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க 1952 ஆன் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி இந்த இடத்தில்தான் தமது குதிரையிலிருந்து வீழ்ந்து பின்னர் அகால மரணத்தைத் தழுவினார்.

பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1956 ஆன் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தனிச்சிங்கள சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய வேளை, தமிழ்த் தலைவர்கள் இதே காலிமுகத் திடலில்தான் அமைதிப் போராட்டம் நடத்தி சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர். இதுவே ஈழத்தமிழர்களால் நடத்தப்பட்ட முதலாவது சத்தியாக்கிரகம்.

இஸ்லாமியர்கள் வருடா வருடம் இங்குதான் ஆயிரக்கணக்கில் கூடி புனித ரம்ழான் தொழுகையை நடத்துவர். ஆட்சி நடத்தும் அரசியல் கட்சிகள் தங்களின் மே தின விழாவுக்கான இடமாகவும் இதனையே பயன்படுத்துவது வழக்கம்.

இலங்கைக்கு பெருமளவு அந்நியச் செலாவணி பெற்றுக் கொடுக்கும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தினமும் இந்தக் காலிமுகத் திடலில் கூட்டம் கூட்டமாக கூடிக் களிப்பர். அதனைக் கண்டுகளிக்க இன்னும் பல கூட்டங்கள் அங்கிருக்கும்.

யாழ்ப்பாணப் பனங்கிழங்கு, கறுத்தக் கொழும்பு மாம்பழம், வகைவகையான சுண்டல் கடலைகள் - வடைகள், ஐஸ்கிறீம் வண்டிகள் என்று வியாபாரம் இங்கு எப்போதுமே களைகட்டி இடம்பெறும்.

கடந்த சில நாள்களாக இன்னொரு வகையில் காலிமுகத் திடல் சர்வதேசத்தின் பார்வைக்குட்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும், ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனச் சபதம் எடுத்துள்ள ஆயிரமாயிரம் மக்கள் அரசியல் இன, மத, வர்க்க வேறுபாடின்றி இரவு பகலாக கொதிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் இங்கு முகாமிட்டுப் போராடி வருகின்றனர்.

நுகேகொட மிரிஹானவிலுள்ள கோட்டாபயவின் தனிப்பட்ட இல்லத்துக்கு முன்னால் ஆரம்பமான மக்கள் பேரியக்கம் நாடெங்கும் வியாபித்து ஒரு வாரத்துக்கு மேலாக முழுமையான அமைச்சரவை இல்லாத அரச இயந்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. நிலைமையைச் சமாளிக்க அண்ணன் மஹிந்தவும், தம்பி கோட்டாபயவும் எத்தனையோ பேச்சுவார்த்தைகளை பல மட்டங்களில் நடத்தியும் இதுவரை எதுவும் வெற்றி பெறவில்லை.

அரசாங்கக் கூட்டுக்குள் அமைச்சர்களாகவிருந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார அணியினரின் பிரதான இலக்காகவிருந்த பஸில் ராஜபக்ஷவிடமிருந்து நிதி அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட ஒரேயொரு விடயத்தைத் தவிர மிகுதி எல்லாமே பழையபடிதான்.



யார் என்னதான் கோசித்தாலும் தாம் பதவி விலகப் போவதில்லையென்ற நிலைப்பாட்டில் கோட்டாபய விடாப்பிடியாகவுள்ளார். இதன் பிரதிபலிப்பாக, காலிமுகத்திடலில் கூடியிருப்பவர்கள் அந்த இடத்தில் – கோட்டா கோ கம (கோட்டா கோ கிராமம்) எனப் பெயர்ப்பலகை நாட்டி தொடர்ந்து போராடுகின்றனர்.

இதற்கு வலுவூட்டும் வகையில் கோட்டா கோ நூலகம், கோட்டா கோ பாடசாலை, கோட்டா கோ உணவகம் போன்ற பல பெயர்ப்பலகைகள் ஆங்காங்கே நாட்டப்பட்டுள்ளன. இவற்றுள் இறுதியாகச் சூட்டப்பட்டது புதியவகை குப்பைத் தொட்டிகள். இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்கவென எதிரணியிலிருந்து பாய்ந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் இந்தத் தொட்டிகளில் ஒட்டப்பட்டு, ஜனநாயகத்தை விற்பனை செய்தவர்கள் என்று கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களிடம் கையூட்டல் பெற்று பல்டி அடித்தவர்கள் என்பது இதற்கான அர்த்தம்.

தொங்குநிலையிலுள்ள ஆட்சித்தரப்பு இன்றும் அவ்வழியிலேயே பயணிக்கிறது. சுயாதீனமாக செயற்பட முடிவெடுத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சாந்த பண்டாராவுக்கு ராஜாங்க அமைச்சர் பதவி கொடுத்து தம்பக்கம் இழுத்துள்ளது ஆளும் தரப்பு. இத்தொடரில் இன்னும் சிலர் பேரம் பேசப்படுகின்றனர்.

வேட்டி மட்டுமன்றி கௌபீசணமும் அவிழும் நிலையிலுள்ள அரசு, வங்குறோத்து நிலையை பிரகடனம் செய்துள்ளது. ஆங்கிலத்தில் இதனை பாங்கிரப்சி என்பர். வெளிநாடுகளில் பெற்ற கடனை அதற்குரிய தவணைக் காலத்தில் செலுத்த முடியாதென்று அரசு அறிவித்துள்ளது. சில தனிநபர்களும் இவ்வாறு வங்குறோத்து நிலைக்குச் செல்வது வழக்கம். இவ்வாறு வங்குறோத்து நிலைக்குச் செல்பவர்களை – எட்டாம் கட்டைக்கு எழுதப்பட்டவர்கள் என்று, தமிழில் சிலேடையாகக் கூறுவர். இதுவே இன்றைய கோட்டா ஆட்சியின் நிலைமை.

இந்தச் சந்தர்ப்பத்தைப் போராடுபவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். காலிமுகத் திடலை காணிவேலாக்கக் கூடாது. விடுமுறைகால கொண்டாட்டங்கள் போல மாற்றக்கூடாது. அவித்த மரவள்ளிக் கிழங்கும், புரியாணியும், புதுவருடத்துக்கான கொண்டைப்பணியாரமும் வழங்குவதற்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் பார்வை வேறுபடலாம். மழைக்காக அங்கு அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களைப் பார்த்து, எந்த வெளிநாடு இதன் பின்னணியில் நிற்கிறது என்று கேள்வி எழுப்பவும் இடமளிக்கக்கூடாது.

பேரம் பேசுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை கைவிட்டு அரசியல் கட்சிகள் ஆங்காங்கே கூடிக்கலைகின்றன. இந்தச் சந்திப்புகள் அனைத்திலும் தவறாது பங்குபற்றும் ஒரேயொரு தமிழர் கூட்டமைப்பின் சுமந்திரன். பிரதமர் மஹிந்தவையும் தனிமையில் சந்தித்து உரையாடியுள்ளார். ஆனால், தாம் கூட்டமைப்பின் பிரதிநிதியாக இவற்றில் சம்பந்தப்படவில்லையென்று விளக்கம் வேறு கொடுக்கிறார். அரசியலைப் பொறுத்தளவில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக தாம் இல்லாவிடின் இந்தச் சந்திப்புகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதை சுமந்திரன் ஒரு தடவை தமக்குத் தாமே கேட்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையற்ற இலங்கை அரசியல் சூழலில் எதிரணிகள் எதனைச் செய்ய முனைந்து கொண்டிருக்கின்றன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகளின் அடிப்படையில் இதனை மூன்று வகையாகப் பார்க்கலாம்:–

1.கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவது, ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவது, இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது என்பவை முதலாவதாக வந்தன. எதிரணிகள் தமக்குள் ஒன்றுபட்டு செயற்படத் தவறியதால் இது சாத்தியப்படாமல் போயிற்று. இந்த நிலைமையை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முனையும் மஹிந்த, தமது பிரதமர் பதவியை புதல்வர் நாமல் ராஜபக்ஷவுக்கு பெற்றுக் கொடுக்க காரியங்களை ஆற்றுகிறார் என ஒரு செய்தி வந்துள்ளது.

2.அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்பம் பெறப்படுகிறது. சஜித் பிரேமதாஸ இதில் ஒப்பம் இட்டிருக்கின்றமைக்குச் செய்திகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. அறுதிப் பெரும்பான்மைக்குரிய ஒப்பங்கள் பெறத் தவறின், இதுவும் சாத்தியப்படாது. சஜித் மீதுள்ள வெறுப்பினால் ரணில் விக்கிரமசிங்க கோட்டாபய தரப்புக்கு ஆதரவு வழங்கி வருகின்றமையையும் கவனிக்க முடிகிறது.

☞ 10

காலைக்கதிர் Kalaikkathir

# அவர்களின் போராட்டம் வறுமைக்கானது; எங்களின் போராட்டம் வாழ்க்கைக்கானது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விளக்கம்

அவர்களின் போராட்டம் வறுமைக்கானது; எங்களின் போராட்டம் வாழ்க்கைக்கானது!

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் வெளியிட்ட அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் வைத்ததன் அர்த்தம் சஜித்திலோ ரணிலிலோ அல்லது பொன்சேகாவிலோ நம்பிக்கையுள்ளது என்பதல்ல. இனப்படுகொலையாளிகளான ராஜபக்ஷக்களைப் பதவியில் தொடர அனுமதிக்க முடியாது என்பதனாலேயே.

கையொப்பம் வைக்கப்பட்டது – அதற்காகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு உடன்படாத எவரையும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டாது.

அரசியல் தீர்வற்ற வெறும் ஆட்சி மாற்றங்களுக்குக் கொடிபிடிக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. அவ்வாறு கொடி பிடிப்பதனால் தமிழினத்திற்கு எதுவும் கிடைக்கப் போவதுமில்லை.

அவர்களின் போராட்டம் வறுமைக்கானது!



எங்களின் போராட்டம் வாழ்க்கைக்கானது!

அரிசி, பருப்பின் விலை குறைந்தால் அவர்களின் போராட்டம் முடியும்.

இனப்படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரை எங்களின் போராட்டம் தொடரும்.

போராட விரும்பும் தமிழ் இளைஞர், யுவதிகள் 1500 நாள்களைக் கடந்தும் தெருவில் போராடிக் கொண்டிருக்கும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளோடு கைகோருங்கள். – என்று உள்ளது.

# ஆற்றில் குளிக்கச் சென்றவர் முதலை தாக்கி உயிரிழந்தார்

## வாழைச்சேனைப் பகுதியில் சம்பவம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

முதலை தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய பூபாலப்பிள்ளை துரைராசா எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் விவசாய நடவடிக்கையை முடித்து விட்டு கானந்தனை பகுதி ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போதே இவர் முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்ததுவ். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 'கோட்டாகோகம'வில்

காலிமுகத் திடல் போராட்டக்காரர்களின் உரிமைகள் மீறப்படும் விளிம்பில் இருக்கின்றன எனக் கவலை தெரிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் முதல் தினசரி அடிப்படையில் பொது போராட்ட தளத்திற்கு வருகை தர இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

ஆரம்ப கட்டமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் சனி இரவு 9.00 மணியளவில் காலி முகத்திடலில் ஆய்வுச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டனர் என இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பணிப்பாளர் தலைமையிலான குழுவொன்று காலி முகத்திடலான 'கோட்டா கோ கம' வளாகத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தது.

## எப்படிப் போராடுவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுமானால் தற்போதைய பிரதமர் அறுபது நாள் களுக்கு ஜனாதிபதி பதவியை வகித்தவாறு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றம் தன்னைத் தயார்படுத்த வேண்டும். இதுகூட தற்போதைய அரசியல் அமைப்பில் திடமாகக் காணப்படவில்லையென்று சில தரப்புகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

3. இம்பீச்மன்ட் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஜனாதிபதியை பதவி நீக்கும் குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் முயற்சியும் இடம்பெறுகிறது. இதற்கான ஆவணத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பம் பெறப்படுகிறது. இது எந்தளவுக்குச் சாத்தியமாகும்? இதனை தெரிந்து கொள்வதற்கு 1991ஆம் ஆண்டின் நிகழ்வொன்றுக்கு நினைவை கொண்டு செல்ல வேண்டும்.

1991 செப்டம்பர் மாதத்தில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவை பதவி நீக்க முன்னெடுக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை எவ்வாறு கருவிலேயே கலைக்கப்பட்டது என்பதை பலரும் மறந்திருக்கலாம். பிரேமதாஸவுடன் ஒத்துப்போகாத அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், காமினி திசநாயக்கவும் இம்முயற்சியில் மிகமிக ரைகசியமாக ஈடுபட்டு பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பங்களைப் பெற்று, சபாநாயகரிடம்

கையளிக்கவிருந்த வேளையில், சபாநாயகர் எம்.எச்.மொகமட் திடீரென நாடாளுமன்ற கூட்டத்தொடரை காலவரையின்றி ஒத்தி வைத்தார்.

அத்துடன் நிறுத்தாது, பிரேரணையில் ஒப்பமிட்டவர்களில் சிலர் அது தங்களுடைய ஒப்பமில்லையென்று கூறியதாகவும் தெரிவித்து பிரேரணையை நிராகரித்தார். ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆலோசனையில் (உத்தரவில்) இது இடம்பெற்றது என்பது பரம ரகசியம். இதன் அடுத்த கட்டமாக லலித் அத்துலத் முதலியையும் காமினி திசநாயக்கவையும் அமைச்சர் பதவியிலிருந்து பிரேமதாஸ வெளியே வீசினார்.

இப்போது நாடாளுமன்ற சபாநாயகராக இருப்பவர் கோட்டாபயவின் கட்சியைச் சேர்ந்த அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இவரும் அன்றைய சபாநாயகர் மொகமட் போன்றே நடந்து கொள்வார் என்பது நிச்சயம். இந்தச் சூழ்நிலையில் குற்றவிசாரணைப் பிரேரணை எதிர்பார்க்கும் பலனை அளிக்காதென்றே சொல்ல வேண்டும்.

மறுபுறத்தில் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை இழுத்தடித்து, அவர்களின் ஊக்க சக்தியை குறைப்பதில் ராஜபக்ஷக்கள் சாதுரியமாக செயற்படுகிறார்கள். கள நிலைவரமும், இராணுவ பக்கபலமும், எதிரணியினரைக் கையூட்டி தம்வசப்படுத்துவதும் ராஜபக்ஷக்களுக்கு சாதகமாகவே உள்ளன.

போராட்டம் நடத்துபவர்கள் – முக்கியமாக இளந்தலைமுறையினர் தங்கள் நோக்கம் நிறைவேற வேண்டுமெனில் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. எப்படிப் போராடுகிறோம் என்பது முக்கியமல்ல, எதற்காக போராடுகிறோம் என்பதை மறவாது அதற்கான பாதையில் பயணிக்க வேண்டும்.

**நன்றி:'பதிவு' இணையம்**

# மட்டு.சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை

உயிர்த்த ஞாயிறு முன்னிட்டு மட்டக்களப்பில் உள்ள சகல தேவாலயங்களிலும் நேற்று உயிர்த்த ஞாயிறு தின ஆராதனை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் பங்களிப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை குண்டுதாக்குதலுக்கு உள்ளான சீயோன் தேவாலய ஆராதனை மட்டக்களப்பு பிள்ளையாரடி சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

போதகர் றொசான் மகேசன் அவர்களினால் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் நல்லாசி வேண்டியும் நாட்டு மக்கள் அனர்த்தங்களினால் பாதிக்காமல் பாதுகாக்க வேண்டியும் இங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை இடம் இவ்வழிபாடுகளுக்காக விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பொதுமக்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றி உயிர்த்த ஞாயிறு ஆராதனை வழிபாடுகள் கலந்து கொண்டனர். வழிபாடுகளின் இறுதியில் போதகர்களும் அடியார்களும் உயிர்த்த ஞாயிறு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். ஆராதனையில் கலந்துகொண்ட சிறார்களால் உயிர்த்த ஞாயிறு சிறப்பு நாடக நிகழ்வுகளும் இங்கு இடம் பெற்றன.

# ஜே.வி.பியினரின் பேரணி பேருவளையில் ஆரம்பம்



“அடக்குமுறை அரசாங்கத்தை அகற்றுவோம் என்ற தொனிப்பொருளில் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட பேரணி நேற்றுக் காலை பேருவளையில் ஆரம்பமானது.

மக்கள் பேரணி என்று பெயரிடப்பட்ட பேருவளை நகரத்திலிருந்து புறப்பட்ட போராட்டம் நாளை ஏப்ரல் 19 ஆம் திகதி (செவ்வாய்கிழமை) கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகில் நிறைவடையவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்களும் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த திஸாநாயக்க, மக்கள் இப்போது செய்ய வேண்டியது எதிர்ப்புகளுக்கு அப்பால் சென்று இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, சட்டத்தின் ஆட்சி, மோசடி மற்றும் ஊழலற்ற அரசாங்கம், சொத்துக்களை கைப்பற்றும் அரசாங்கம் ஆகியவற்றை கட்டியெழுப்ப வேண்டும்.

ஊழல், மற்றும் மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளை தண்டிக்கும் அரசாங்கம். இதற்கான பரந்த தளத்தை தேசிய மக்கள் சக்தி உருவாக்கியுள்ளது என்றும், இதற்காக மக்களை ஒன்று திரட்டுவதற்காக இன்று இந்த நடைப் பயணத்தை தயார் செய்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.